

# அதுவா, இதுவா?

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics

4.3

சிறீரஞ்சனி

STEM-Kalvi Charity



பாட்டியும் மதுவும் கடைக்குப் போனார்கள். பாட்டியின் கைகளை மது இறுகப் பற்றியிருந்தாள். காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது. அது மதுவுக்குப் பிடித்திருந்தது. ஆனால், அவளின் தலைமயிர் காற்றில் அங்குமிங்குமாகப் பறந்து கொண்டிருப்பது அவளுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

அவளின் கண்களுக்கு முன்னால் காற்றுக் கொண்டுவந்துவிடும் தலைமயிரைத் திரும்பத்திரும்ப அவள் ஒதுக்கிவிட வேண்டியிருந்தது.

“பாட்டி, இந்தக் காற்று என்னுடைய தலைமயிரைக் குழப்புகிறது. எனக்கு இது பிடிக்கவில்லை,” என்றாள் மது.

“என்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு பின்பக்கமாக நடந்து வா. அப்படி நடந்தால், காற்று உன்னைப் தொந்தரவு செய்யாது” என்றார் பாட்டி.

‘‘ஆனால், முகத்தில் அடிக்கும் காற்று எனக்குப் பிடித்திருக்கிறதே,” என்றாள் மது.

பாட்டி சிரித்தார். “ஒன்று தேவை என்றால், இன்னொன்றைப் பொறுத்துத்தான் போகவேண்டும், வேறு வழியில்லை,” என்றார்.



கடையில், நிறைய அன்னாசிப் பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. சிவப்பு நிறத் திராட்சைப் பழங்கள் குலைகுலையாக அடுக்கப்பட்டிருந்தன. வெவ்வேறு வகையான அப்பிள் பழங்கள் மலைபோலக் குவிக்கப்பட்டிருந்தன.

“பிள்ளைக்கு எந்தப் பழம் வேண்டும்?” எனப் பாட்டி மதுவிடம் கேட்டார்.

“எனக்கு எல்லாப் பழங்களும் பிடிக்கும்,” என்றாள் மது.

“எல்லாவற்றையும் வாங்குவதற்கு என்னிடம் போதுமான காசில்லை. அன்னாசிப் பழம் வேண்டுமானால் அப்பிள் பழங்கள் வாங்கமுடியாது” என்றார் பாட்டி. “அப்பிள் பழங்கள் வாங்கினால் திராட்சைப் பழங்களை வாங்கமுடியாது,” என்றாள் மது.

“பிள்ளை கெட்டிக்காரி, பிள்ளைக்கு விளங்குகிறது,” என மதுவைப் பாராட்டினார் பாட்டி. “காய்கறிகளும் வாங்கவேண்டும் என்பதால், ஏதாவதொரு பழத்தை இப்போது வாங்குவோம். அடுத்த முறை வேறொன்றை வாங்குவோம், சரியா?” என்றார் பாட்டி.

எங்களுக்கு விருப்பமான அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பது மதுவுக்கு விளங்கியது. அத்துடன், எது முக்கியமானதெனத் தெரிவுசெய்ய வேண்டியது அவசியமென்பதும் அவளுக்கு விளங்கியது.

அன்னாசிப் பழங்கள் மஞ்சள் நிறத்தில் அழகாக இருந்தன. அவற்றின் வாசம் அவளின் மூக்கை நிறைத்தது. அன்னாசிப் பழம் சாப்பிட்டுப் பல நாள்கள் ஆகிவிட்டன என்பது மதுவின் நினைவுக்கு வந்தது.

“சரி, பாட்டி. அன்னாசிப் பழம் ஒன்றை வாங்குவோம்,” என்றாள் மது.

பாட்டி அன்புடனும் கனிவுடனும் மதுவின் தலையை வருடிவிட்டார்.



பின்னர் சில காய்கறிகளையும், அன்னாசிப்பழம் ஒன்றையும் வாங்கிக்கொண்டு அவர்கள் வீட்டுக்குச் சென்றனர்.

**Publisher:** STEM-Kalvi Charity
**E-mail**: STEMkalvi@gmail.com
**Web:** WWW.STEMkalvi.org
**Writer :** Sriranjani Vijenthira,
Toronto, Canada
**Book: Athuva, Ithuva?**
**(அதுவா, இதுவா?)**

**Language: Tamil**

**Reading Level:** **4.3**

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022

**Licence:** This license enables reusers to distribute, remix, adapt, and build upon the material in any medium or format, so long as attribution is given to the creator. The license allows for commercial use.

CC BY SA



**About the writer :** Sriranjani writes short stories, essays and reviews, and bilingual children's books. Her short story collections have won the Godage and State Literary awards in Sri Lanka. She also works as a Tamil teacher at the Toronto District School Board. Her bilingual children's books are used as teaching materials across the Toronto region. Sriranjani received her Bachelor of Science from the University of Peradeniya and Master of Arts in Tamil Language & Literature from Annamalai University.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics